Y. M. C வாசிகசாலை

Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள்: 04    விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஸூ ஆனி மீ 17 ஆம் உ    ஞாயிற்றுக்கிழமை    (01 - 07 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஜ் 7    ஓசை 133

## இந்தியப் பிரதமர் அறிக்கை குறித்து இலங்கை கவலை!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்தும் வகையில் இந்தியா தக்க நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியப் பிரதமர் திரு வி. பி. சிங் விடுத்துள்ள அறிக்கை குறித்து தாம் கவலை அடைந்துள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இந்தியப் பிரதமரின் இந்த அச்சுறுத்தல் அறிக்கையைத் தொடர்ந்து சிறிலங்கா அரசின் தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டம் விரைவில் நடத்தப்பட உள்ளது. இந்தக் கூட்டத்தில் இந்தியப் பிரதமரின் இந்த அச்சுறுத்தல் அறிக்கையின் விளைவுகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட உள்ளதாகவும் சிறி (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாலைதீவுக்கு அண்மையில் கடற்படைப் பீரங்கிப் படகு

(விசேடநிருபர்)

பாலைதீவுக்கு கிழக்கே ஸ்ரீலங்கா கடற்படைப் பீரங்கிப்படகொன்று நேற்று முன்தினம் இரவு முதல் நிலைகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் பீதியுடன் தொழில் செய்யாமற் திரும்பி வந்துள்ளனர்.


கடற்படைப் பீரங்கிப்படகு பாலைத்தீவுப் பகுதியில் வந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுப்பிட்டிப் பகுதியில் கொள்ளையர் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப் பகுதியில் கொள்ளையர் அட்டகாசம், திருடர்கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நேற்றிரவு சிறுப்பிட்டியில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சிவலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர் குசினிக்குள் நிலத்தின் கீழ் புதைத்து (4ஆம் பக்கம் பார்க்க)



நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். நகரில் ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் இரண்டரை மணிநேரம் வானத்திலிருந்து நடத்திய தாக்குதலில் சேதமடைந்த பல கட்டிடங்களில் சிலவற்றை இங்கு காணலாம்.

# விமானத் தாக்குதலில் கிளிநொச்சி மாவட்டம்!

## நேபாம் குண்டுகளால் காடுகள் எரிப்பு; தர்மபுரத்தில் ஒருவர் பலி; வீடுகள் சேதம்

(கிளிநொச்சி)

ஸ்ரீலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்களும் அவ்ரோ விமானங்களும் ஹெலிகொப்டர் சகிதம் நேற்றுக் காலை முதல் பிற்பகல்வரை கிளிநொச்சி மாவட்டத்தில் சரமாரியாகக் குண்டுவீசித் தாக்குதல் நடத்தின. இக்குண்டு வீச்சில் தர்மபுரத்தைச் சேர்ந்த சௌந்தரராஜன் என்ற கடைக்காரர் கொல்லப்பட்டார். பரந்தனில் அரிசிக் களஞ்சியக் கட்டிடம் சேதமடைந்தது. இந்தப் போர் விமானங்கள் நேபாம் குண்டுகளை வீசியதாகக் கருதப்படுகிறது. குண்டுவீச்சில் பலர் காயமடைந்

## எட்டுப் படையினர் கால்களை இழப்பு

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகப் பகுதியில் கண்ணிவெடி

## ஸ்ரீலங்கா விசேஷ தூதுவர் பேர்னாட் டில்லி விரைகிறார்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. பேர்னாட் திலகரட்ன விசேட தூதுவராக நாளை திங்கட்கிழமை டில்லி செல்லவுள்ளார்.

இலங்கை அரசின் விஷேட தூதுவராக டில்லி செல்லும் இவர் இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கிற்கு இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவின் விஷேட செய்தி ஒன்றையும் கொண்டு செல்வார் எனவும் தெரிகின்றது. இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளரைச் சந்தித்துபேசவுள்ளதுடன் வெளியுறவுஅமைச்சர் திரு குஜ்ராலையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பின் போது இலங்கை அரசின் தற்போதய நடவடிக்கைகள் பற்றி விளக்குவார் எனத் தெரிகிறது.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள்குறித்து இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் கவலை தெரிவித்துள்ளதுடன், கண்டனம் தெரிவித்துள்ளதும் தெரிந்ததே. இந்தியாவின் இந்த மனப் (4ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை மத்திய சிறையில் தமிழ்க் குழுக்கள் கலாட்டா

(சென்னை)

சென்னை மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்ட இலங்கைத் தமிழ் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை சிறையில் பெரும் கலாட்டா செய்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கலாட்டா ஆறு மணித்தியாலங்கள் வரை நீடித்தது இக்கலாட்டாவின் போது (4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து வந்த தமிழருக்கு நேர்ந்த அவலம்

புரத்தைச் சேர்ந்த சௌந்தரராஜன் என்ற கடைக்காரர் கொல்லப்பட்டார். பரந்தனில் அரிசிக் களஞ்சியக் கட்டிடம் சேதமடைந்தது. இந்தப் போர் விமானங்கள் நேபாம் குண்டுகளை வீசியதாகக் கருதப்படுகிறது. குண்டுவீச்சில் பலர் காயமடைந்தனர், காடுகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

நேபாம் குண்டு

இப்பொழுது ஸ்ரீ லங்கா அரசு தமிழ்ப் பகுதிகளில் மாவட்டம் மாவட்டமாக நேபாம் குண்டுகளை வீசித் தாக்கி அழிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதுபோல் தோன்றுகிறது.

கடந்த சில தினங்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விமானப்படை விமானங்கள் நேபாம் குண்டு வீசித் தாக்கியதைத் தொடர்ந்து நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் விமானத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளாடியில் கண்ணிவெடி; மூன்று இராணுவம் காயம்!

(மன்னார்)

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து நேற்றுமுன்தினம் முள்ளிப்பள்ளம் நோக்கிவந்தபோது முதலில் வந்தவர் கண்ணிவெடியில் சிக்கினார். அவரைத் தூக்க வந்த இருவரும் கண்ணிவெடியில் சிக்கினர் இதன் காரணமாக மூன்று இராணுவத்தினர் கால்களை இழந்தனர்.

பின்னர் இவர்களுடன் முகாமிற்குத் திரும்பிய இராணுவத்தினர் அங்கிருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். பின்னர் வந்த ஹெலியும் தாக்குதலை மேற்கொண்டது.

## பீரங்கித் தாக்குதலுக்கு நால்வர் பலி

(முல்லைத்தீவு)

கொக்கிளாய், செம்மலை, நாயாறு பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடற்படை பீரங்கித் தாக்குதல்களினால் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணங்களில் இருந்து வந்த பெரும்பாலான மக்களும் இதனால்படுகாயமடைந்துள்ளனர். (58)

## பெருமாளுக்கு இப்போது லக்சதீவில் பாதுகாப்பு

(சென்னை)

தற்பொழுது இயங்காத நிலையிலுள்ள இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதல் மந்திரி வரதராஜப் பெருமாள் இப்பொழுது லக்சதீவில் தங்கியுள்ளார்.

இவருக்கு தற்பொழுது இந்திய மாநில ரிசேவ் பொலிஸார் பாதுகாப்பு அளித்து வருகின்றார்கள். ஆரம்பத்தில் மொறிசியஸில் தங்கியிருந்த வரதராஜப் பெருமாள் தொடர்ந்து அங்கு தங்க மொறிசியஸ் அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை. அதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் தங்க வைக்க எடுக்கப்பட்ட முயற்

(4ஆம் பக்கம் பார்க்க)

### உருத்திரபுரம் வைத்தியசாலை

## ஊழியர் பற்றாக்குறை; நோயாளர் பெரும் அவதி

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் வைத்தியசாலையில் ஊழியர் பற்றாக்குறை அதிகமாக உள்ளதால் நோயாளர் பெரும் கஷ்டமடைகின்றனர். குறிப்பாக தாதிமார் எவருமே இல்லாததால் நோயாளர்களுக்கு ஊசி ஏற்றும் வேலையையும் மேற்படி வைத்தியசாலை டாக்டரே செய்யவேண்டியுள்ளது.

கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதத்தைத் தொடர்ந்து கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் உருத்திரபுரம், முரசு மோட்டை, வட்டக்கச்சி, முருகண்டி ஆகிய பகுதிகளிலேயே கூடுதலாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

வட - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு கழகம் கிளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'கருணாநிதி கோரியதை இன்று செய்ய வேண்டும்'

### - வாழப்பாடி

(சென்னை)

''தற்போதைய தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு எதனைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினாரோ; அதனை அவர் இன்று நடைமுறைப் படுத்த முன்வரவேண்டும்'' என்று தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகப் பகுதியில் கண்ணிவெடிகளைஅகற்றுவதில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த எட்டுப் படையினர் தமது கால்களை இழந்துவிட்டதாக அரசு அறிக்கை தெரிவித்தது.

## வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானப் படை முகாமிலிருந்து நேற்று இடைவிடாது பயிலிட்டி பிரதேசத்தை நோக்கி நடைபெற்ற ஷெல் தாக்குதலால் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் தம்பி எனப்படும் ,ரைச்சாமி வீர மரணமடைந்தார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (லோ)

## ஹெலித் தாக்குதல்

(வல்வெட்டித்துறை)

திக்கம் முதல் மண்டான் வரை ஹெலி கொப்டர் தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணியளவில் இடம்பெற்றது. காங்கேசன் துறைப் பகுதியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் புதிய உத்தியாம்

(கொழும்பு)

அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் பொழுது அதில் ஈடுபட்டவர்களை எதிர்ப்பது எமது நோக்கமல்ல என்று ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் காரர்களுடன் பேச்சுக்களையும், கலந்துரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறையில் இருந்து 136பேர் விடுதலை

(சென்னை)

சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து 136 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்கள் இவர்களில் ஒருபெணும் அடங்குவார்.

விடுதலை செய்யப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்கு நேர்ந்த அவலம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் தாக்குதல் சம்பவங்கள் தொடங்கப்பட்டதின் பின்பு கொழும்பிலிருந்து ஏறக்குறைய நூறு பயணிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள்

இரு நூறுக்கு மேற்பட்ட பயணிகள் இரண்டு பஸ்களில் புறப்பட்டு யாழ். நோக்கி வந்ததாகவும், இதில் ஒருபஸ் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மீண்டும் கொழும்புக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகின்றது.

யாழ். வந்தடைந்த பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் சிங்கள காடையர்களால் மத வாச்சியில் கடுமையாக தாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் குழந்தைகள் வயோதிபர் உட்பட பலர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புநகரில் நேற்று முன்தினம் இலங்கை அரசாங்கத்தினால்திடீரெனகாலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அப்பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் குழந்தைகள் முதியவர்கள் உட்பட ஏராளமானோரைக் கைதுசெய்தனர்.

கைது செய்த இடத்திலேயே சிலர் கொடூரமாகத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வைத்திய அதிகாரிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, முல்லைத்தீவு வைத்திய சாலைகள் தற்சமயம் செயலிழந்து மூடப்பட்டிருப்பதால் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி திரு. சண்முகம், டாக்டர் லங்க நாகராசனும் எதிர்வரும் செவ்வாய் முதல் புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றலாகியுள்ளனர். இதேவேளை முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி திருமதி சுந்தரலிங்கம் முள்ளியவளை ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகியுள்ளார்.

வவுனியா ஆஸ்பத்திரியைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செம்மலைக்கு நேற்றும் 2000 திருமலை அகதிகள்

(செம்மலை)

புடவைக்கட்டிலிருந்து செம்மலை அகதி முகாமுக்கு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் நேற்று வந்து சேர்ந்துள்ளார்கள். இவர்கள் காட்டுப் பாதை

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் 310 அகதி முகாம்களில் 35,000 குடும்பங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் 310 அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள 35044 குடும்பங்களுக்கு இரண்டாவது வாரத்துக்கான உலர் உணவுப் பொருள் விநியோகம் நாளை 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

இவர்களில் 90 சதவீதமானோருக்கு முதலாவது வாரத்துக்கான உலர் உணவு விநியோகம் நேற்றுடன் பூர்த்தியடைந்ததாக யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார். மிகுதி 10 சதவீதமானோருக்கு சனி ஞாயிறு தினங்களில் வழங்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள இடங்களில் வசித்த 35000 குடும்பங்கள் அகதிகளாகியுள்ள அதேவேளையில் திருமலை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் போன்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான யுத்தம் தமிழர் மீதான யுத்தத்திற்குச் சமம்

### - பாலகுமார்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மேல் தொடுக்கப்பட்டுள்ள யுத்தம் என்பது முழுத் தமிழ் பேசும் மக்கள் மீதும் தொடுக்கப்பட்ட 'யுத்தத்திற்குச் சமானம் என்பதையும், தமிழ்பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சகலஅடக்குமுறைகளும்உடன் நிறுத்தப்படாவிட்டால் இதுவரை காலமும் சிங்கள அரசியல் தலைமைத்துவங்கள் தமிழ்பேசும் மக்களுக்கு இழைத்த நம்பிக்கைத் துரோ

(4ஆம் பக்கம் பார்க்க)

# A/L பௌதிக இரசாயனம்

# வெப்ப இரசாயனம்

## தொடர் - 6


## சத்தீஸ்

### எசுவின் விதியைப் பயன்படுத்தித் தோன்றல் வெப்பங்களைத் துணிதல்

$C(gr) + 2H_2(g) \rightarrow CH_4(g)$ என்னும் தாக்கம் நேரடியாக நிகழமாட்டாது. அதாவது $CH_4$ இன் தோன்றல் வெப்பம் $\Delta H_f$ நேரடியாகத் துணிய முடியாது.

மெதேனின் தோன்றல் வெப்பத்தைத் துணிதல் $\Delta H_{f\,CH_4}$

முறை 1 சக்திவட்டம் ஒன்றைப் பயன்படுத்துதல்




இங்கு,

$\Delta H_f$ = $CH_4$, இன் மூலர் தோன்றல் வெப்பம்

$\Delta H_1$ = $CH_4$, இன் மூலர் தகனவெப்பம் = $-890\ KJ\ mol^{-1}$

$\Delta H_2$ = $C(gr)$ இன் மூலர் தகனவெப்பம் = $-394\ KJ\ mol^{-1}$

$\Delta H_3$ = 2 மூல் $H_2$ இன் தகனவெப்பம் = $-286 \times 2 = -572\ KJ\ mol^{-1}$

இங்கு $\Delta H_1$, $\Delta H_2$, $\Delta H_3$, என்பன குண்டுக்கலேரிமானி ஒன்றைப் பயன்படுத்தித் துணியப்படும்.

எசுவின் விதிப்படி,

$$\Delta H_f + \Delta H_1 = \Delta H_2 + \Delta H_3$$


$$\Delta H_f + (-890) = -394 + (-572)$$

$$\Delta H_f = -966 + 890$$

$$= -76\ KJ\ mol^{-1}$$

$$\Delta H_{f\,CH_4} = -76\ KJ\ mol^{-1}$$

முறை 2 : வெப்ப உள்ளுறை வரைபு ஒன்றைப் பயன்படுத்துதல்




## சாவகச்சேரியில் அகதிகள் அதிகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் பாடசாலைகள், ஆலயங்கள் ஆகிய பொது இடங்களில் தினம் தினம் அகதிகளின் தொகை அதிகரித்தவண்ணம் உள்ளன.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், மட்டுவில் புனித லூர்துமாதா தேவாலயம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் நூற்றிற்கு அதிகமான குடும்பங்கள் அகதிகளாக வந்துள்ளன.

இதைத் தொடர்ந்து மட்டுவில் மகாவித்தியாலயம், மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய இடங்களுக்கும் அகதிகள் குடும்பங்களாக வந்து தங்கியுள்ளனர். (35)

## வயிற்றோட்ட அபாயம்

(ஈச்சமோட்டை)

குருநகரில் இருந்து அகதிகளாக கொழும்புத்துறை சென். ஜோசப் மகா வித்தியாலயத்தில் தங்கியிருப்போருக்கு வயிற்றோட்டம் வாந்திபேதி என்பன ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுவதுடன் ஒரு சிலர் இந்நோயால் தற்சமயம் பீடிக்கப் பட்டுமுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நாளாந்தம் மருத்துவமாதுக்கள் முகாமுக்குச் சென்று சிகிச்சை அளித்துவருவதுடன்; முதலுதவி சிகிச்சை படைபிரிவினர் எல்லா முகாம்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டு காயங்கள்போன்றவற்றுக்கு சிகிச்சை அளித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (43)

## சுகாதார சேவை ஊழியர்கள் கடமைக்கு வரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வைத்திய நிலையங்களும் தற்போது சீராக இயங்குவதால் இந்த நெருக்கடியான கட்டத்தில் சுகாதார சேவை அதிகாரிகளும் ஊழியர்களும் சிரமங்களை பாராது மக்களுக்கு சேவை செய்யும் வண்ணம் கட்டாயமாக வேண்டப்படுகிறார்கள். என சுகாதார சேவைகள் பிரதேச பணிப்பாளர்கள் டாக்டர் என். கனகசபை அறிவித்துள்ளார்.

இதுவரை கடமைக்கு சமுகம் அளிக்காதவர்களும் விடுமுறையில் நிற்பவர்களும் உடனடியாக தங்கள் கடமைபுரியும் நிறுவனத்துக்கு தவறாது சமுகம் தருமாறும் அவர் அறிவித்துள்ளார்.

மத்திய மருந்தகங்கள் ஞாயிறு மற்றும் விடுதலை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை கடமைபுரியவும், விடுதலை நாட்களில் காலை 8 மணி முதல் பகல் 10 மணிவரை கடமைபுரியவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஒரு சில மத்திய மருந்தகங்களிலும் சிறு வைத்திய சாலைகளிலும் கூடுதலான வைத்திய அதிகாரிகளை நியமித்தும், கூடுதலான மருந்து வகைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் பொதுமக்களுக்கு அறிவிக்கிறார்.

தற்போது மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவசர, கடும் நோயாளர்கள் மட்டுமே சிகிச்சைக்கு செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார்.

நோயாளர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு அண்மையில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கு செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாயில் இயங்கும் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்கள் இடமாற்றம் செய்யும்போது எரிபொருள் பற்றாக்குறை, இடநெருக்கடி, மருந்துத்தட்டுப்பாடு என்பவற்றை கவனத்தில் கொண்டு இயன்றளவு தவிர்க்கும் படி வைத்தியசாலைப் பொறுப்பு அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## செஞ்சிலுவைச் சங்கம் வெளிமாவட்ட மக்களையும் கருத்தில்கொள்ளவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் இருந்து தாயகம் வந்தவர்கள் திரும்பிச் செல்வதற்கேற்ற ஒழுங்குகளை யாழ். செஞ்சிலுவைச் சங்க உலகசெஞ்சிலுவைச் சங்கத்ன் அனுசரணையுடன் செய்து வருகிறது.

இவ்விதம் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்களை வைத்திருக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் அநேகமானோர் தினமும் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தில் தம்மைப் பதிவுசெய்துகொள்ளும் அதேவேளையில் வெளிமாவட்டங்களில் உள்ளவர்களுக்கு இந்தவசதி மறுக்கப்படுகிறது.

இவர்களுடைய நலன்களையும் உலக செஞ்சிலுவைச் சங்கம் கவனிக்க வேண்டுமென வன்னி, மன்னார் மாவட்டங்களைச்சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுள்ளார்கள்.

முக்கியமாக ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ளபிற மாவட்டத்தவர்களுக்கும்தாம் தொழில் செய்யும் அல்லது வசித்து வரும் வெளிநாட்டுக்குச் செல்ல வசதி வழங்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

## கட்டிடம் இடிந்து 24 பேர் மரணம்

(பம்பாய்)

பம்பாய் நகரில் பெய்த கடும் மழை காரணமாக நான்கு மாடிக்கட்டிடம் ஒன்று இடிந்து வீழ்ந்தது. இக்கட்டிடத்தில் சிக்கி 24 பேர் உயிரிழந்தார்கள்.

பல வியாபார ஸ்தாபனங்களையும், அலுவலகங்களையும் இக்கட்டிடம் கொண்டிருந்தது

## ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர் கொலையை கண்டுபிடிக்க 500 பொலிசார் நியமனம்

(சென்னை)

ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்தினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து கொலைகாரர்களை கண்டு பிடிக்க ஐநூறு பொலிஸாரை தமிழ்நாடு காவல்துறை நியமித்துள்ளது.

தமிழ்நாட்டில் போராளிகளின் நடமாட்டத்தை தடுக்க நூறு ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் தஞ்சாவூர் கடலோரப்பகுதிகளில் கண்காணிப்பு குழுவும் தீவிரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையின் ஆறு பிரிவுகளும் இதற்காக சென்னைக்கு வந்துள்ளது.

ஏ. கே. 47 ரக துப்பாக்கி பயிற்சி பெற்ற தமிழக பொலிஸாரும் கடலோரப் பகுதியில் நிறுத்தப்படவுள்ளனர்.

## சங்கானை உ.அ.அ. பிரிவில் 3,000 அகதிகள்

சங்கானை உதவிஅரசாங்க அதிபர் பிரிவிற்கு 3,000 மக்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளனர்.

கடந்த (26. 06. 90) செவ்வாய்க் கிழமை நண்பகல் வரை எடுக்கப்பட்ட கணக்கின்படி 3, 000 பேர் காங்கேசன் துறை, மயிலிட்டி, தெல்லிப்பளை மாவிட்டபுரம் கொல்லன் கலட்டி, காரை நகர் பகுதியிலிருந்தும் யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்துள்ளனர்.

இவர்கள் சுழிபுரம், விக்ரோறியா கல்லூரி, சங்கானை ... சங்கானை கலாசார மண்டபம், சங்கானை பொது நூல்நிலையம், நீதிமன்ற கட்டடம், சங்கானை நகர் வைரவர் கோயில், வட்டுக்கோட்டை பகுதிகளிலும் வந்து தங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இயற்கை கழிக்க வசதியின்றி அவதிப்படுகின்றனர். அனேகமாக அயலிலுள்ள வெளிவௌவுகளை பயன்படுத்து கின்றனர்.


இதனால் தொற்று நோய் பரவும் அபாயமும் சில இடங்களில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (12)

## முல்லைத்தீவு அகதிகளுக்கு பல்கலை. மாணவர் உதவி

(முல்லைத்தீவு)

தற்போதுள்ள நிலைமைகாரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுவதற்காக ஒரு தொகுதி ஆடைகளும் சவர்க்கார கட்டிகளும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் குழு இதற்கான ஏற்பாடு




பாதை I    பாதை II

எசுவின் விதிப்படி

பாதை I இன் சக்தி மாற்றம் = பாதை II இன் சக்திமாற்றம்

$$\Delta H_2 + \Delta H_3 = \Delta H_f + \Delta H_1$$

$$-394 + (-572) = \Delta H_f + (-890)$$

$$\Delta H_f = -76 \text{ KJ mol}^{-1}$$

**வரைபு முறையில் உள்ள நன்மைகள்**

1. வரைபு பருமனைக் கொண்டிருப்பதால் சக்திக் கணியங்களை நேரடியாக ஒப்பிடலாம்.
2. இவ்வரைபுகளைப் பருமனுடன் வரைவோமாயின் (உதாரணமாக) மேல்வரையில் 100 KJ சக்தியை 1 cm குறிக்குமாயின் இடைத் தூரத்தை அளந்து சக்திக் கணியத்தை அளக்கலாம் கணிப்புகள் தேவையில்லை.
3. சக்திக் கணியங்களை நேரடியாகச் சமன்படுத்தினால் குறியீடுகள் பயன்படுத்தத் தேவையில்லை. பின்னர் வரைபைப் பயன்படுத்தி குறியீடு வழங்கப்படும். உதாரணமாக மேல் வரைபைக் கருதுவோம்.

$$\Delta H_f + \Delta H_1 = \Delta H_2 + \Delta H_3$$

$$\Delta H_f + 890 = 966$$

$$\Delta H_f = 76 \text{ KJ}$$

$$\Delta H_{f\,CH_4} = -76 \text{ KJ mol}^{-1}$$

(தொடரும்)

யிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்துள்ளனர்.

இவர்கள் சுழிபுரம், விக்ரோறியா கல்லூரி, சங்கானை மகாவித்தியாலையம்,

இதனால் தொற்று நோய் பரவும் அபாயமும் சில இடங்களில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (12)

(முல்லைத்தீவு)

தற்போதுள்ள நிலைமைகாரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுவதற்காக ஒரு தொகுதி ஆடைகளும் சவர்க்கார கட்டிகளும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தொடர்ந்தும் ஆடைகளைச் சேர்த்து வரும் யாழ். பல்கலைக் கழக மாணவருக்கு பொது மக்கள் ஆதரவு தருமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேபோல பல்கலைக் கழக மாணவர்களிடமிருந்தும், பல்கலைக்கழக கல்விகள் கல்விசாரா ஊழியரிடமிருந்தும் நிதிசேகரிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கும் ஆதரவு தருமாறு பல்கலைக் கழக மாணவர் குழு கேட்டுள்ளது.

# உதவிகளைச் செய்வோர் எங்களுடன் சேர்ந்து செய்யுங்கள்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிகள் முகாங்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு உதவி செய்ய விரும்புகின்ற சன சமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சிக்கன கடனுதவு சங்கங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் அனைத்தும் தனிப்பட்ட முறையில் அகதிகளுக்குப் பொருட்களை வழங்காமல் தன்னுடன் தொடர்பு கொண்டு இப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறுபணிவுடன் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த நிர்வாக அதிகாரி திரு. எஸ். தனபாலசிங்கம் சகல பொதுஸ்தாபனங்களில் உள்ள தலைவர்கள், செயலாளர்கள் உட்பட அங்கத்தவர்களையும் கேட்டுக்கொள்கின்றார்.

மேலும் இவ் உதவி வழங்குவது பற்றிய கருத்துக்களை தெரிவிக்கையில்,

ஸ்தாபனங்கள் தனித்தனியாக வழங்குவதில் பாரபட்சங்கள் ஏற்படக்கூடும். எனவே எல்லா நன்கொடை உதவிகளையும் சேர்த்து ஒன்றாக வழங்கும் போது எல்லோருக்கும் சமமாக கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் எனவும் கூறுகின்றார். (14)

# வடகிழக்கு அரசஊழியருக்கு ஜூலை 4க்கு முன் சம்பளம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு ஜூலை மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னதாக சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகஅரசாங்கம்அறிவித்தது.

வர்த்தக வியாபார அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கையை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் மூலம் இதனை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வேலணையில் இணக்கமன்று

(வேலணை)

வேலணை பகுதியில் இணக்கமன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கமன்றை வேலணை இணக்கமன்றப் பொறுப்பாளர் சட்டத்தரணி எஸ். நல்லைநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். (14)


**வைஜீ மெடிக்கல்ஸ்**

**இடமாற்றம்**

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன் உள்ள வைஜீ மெடிக்கல்ஸ் ஸ்தாபனம் பொதுமக்கள் நன்மை கருதி தட்டாதெரு சந்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

வைஜீ மெடிக்கல்ஸ்
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(B / 1207)



**இடமாற்றம்**

**ஹட்டன் நஷனல் வங்கி**

நாளை திங்கட்கிழமை (2-7-90) முதல் வங்கி 54 ஸ்ரான்லி வீதி (அரஸ்கோ கட்டடம்) இடமாற்றம் செய்யப்படவுள்ளதென்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

சேவை நேரம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

சகல வங்கி ஊழியர்களும் திங்கட்கிழமை சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முகாமையாளர்

(R) 391)


**காணாமல்போனவர்கள்தகவல்அறிய**

# மாவட்டங்கள் தோறும் மக்கள் தகவல் மையங்கள்

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்வதற்காக இந்த வார இறுதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் தகவல் மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் சராசரி நான்கு பேர் இருக்கலாம் என்று அவசியப் பணிகளுக்கான தலைமை இயக்குனர் தெரிவித்தார்.

## கூட்டுப் பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

இலங்கை பூராவும் வாழும் தமிழ்மக்களின்அமைதிகுலைந்துள்ள இச் சூழ்நிலையில் அனைத்துத் தமிழ் மக்களின் சுபீட்சம்வேண்டி ஆத்மஜோதி ஆசிரியர் திரு.நா. முத்தையா தலைமையில் தென்மராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து ஆலயங்கள் தோறும் தினசரிப் பிரார்த்தனையும், கூட்டுவழிபாடும் பிற்பகல் நான்கு மணி தொடக்கம் ஐந்து மணிவரை சிறப்பாக நடைபெற்று வருகிறது. (24)

## சிந்தனைக்கு

உதடு பழம் சொரிய; உள்ளே
நெஞ்சு எரிகின்றது.

-தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 01-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# கெட்டிக்காரன் புளுகு எத்தனை நாளைக்கு?

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்குமிடையில் போர் தொடங்கி பத்தொன்பது நாட்களாகிவிட்டன.

அரச படைகள் வடக்கிலும் கிழக்கிலும் முன்னேறிச் செல்வதாகவும் கிழக்கில் ஓரிடத்தைத் தவிர மற்றப் பகுதிகள் யாவும் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் அரசாங்கம் பிரசாரம் செய்துவருகிறது.

''கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு'' என்று சொல்லுவது போல மட்டக்களப்புக்குள் அரச படைகள் புகுந்துவிட்டனவென்றும் அது அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா மூன்று தினங்களுக்குமுன்பெருமையாகச் சொல்ல அங்கு நின்ற பி. பி. ஸி. நிருபர் உண்மைச் செய்தியை வெளியிட சிறிலங்கா அரசின் பொய்ப்பிரசாரம் அம்பலமாயிற்று.

பொதுமக்கள் வாழும் பகுதிகளில் குண்டு வீசித் தாக்கவில்லையென்றும் சிறிலங்காவின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தார்.

விமானத்திலிருந்து யாழ் கோட்டைப் பகுதியில் போடப்பட்ட குண்டுகள் சில விமானிகளின் இலக்குத் தவறியதால் குடிமனைப் பகுதியில் சில வீடுகளில் விழுந்துவிட்டதென்பதையும் அதே பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பின்னர் ஒப்புக் கொண்டார்.

விமானிகள் இலக்குத் தவறி குண்டுகளை குடிமனைப் பகுதியில் வீசிவிட்டதை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஒப்புக்கொண்ட அதே சமயம் விமானப் படையினர் கண்மூடித்தனமாகக் கண்டபடி தாக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியிருக்கிறார்.

இப்படி பாதுகாப்பு அமைச்சுக்குள்ளேயே ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

இதே சமயம் வடக்கு கிழக்குப் பிரச்சினை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும் இதை அரசின் பலவீனமாகக் கருதக் கூடாதென்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா

# யார் இந்த அகதிகள்?

போராட்டக் காலத்தில் அந்த போராட்டத்துக்குட்பட்ட மக்கள் அகதிகளாக்கப்படுவது சகஜமே என்றும்; அவ்வாறு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகளையும் ஒழுங்கு நடவடிக்கைகளையும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போராளிகள் அல்லது இயக்கங்கள்மேற்கொள்வதென்பது நடைமுறை சாத்தியமற்றதென்றும் அப்பணிகளை விடுதலைப் போராட்டத்தினை மேற்கொள்ளும் நாட்டின் பொது ஸ்தாபனங்களும் மக்களுமே செய்ய வேண்டும் என்றும் நான் முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

**பரந்துபட்டு வாழுகின்ற அடக்கப்பட்ட தமிழ் இனத்தின் ஒரு அங்கமே இந்த அகதிகள்.**

வியட்னாம், கம்போடியா, பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் அகதிகள் நிலைமை எவ்வாறு கவனிக்கப்பட்டது என்பதுகுறித்து அந்நாடுகளின் உதாரணங்களின் மூலம் நாம் அறியலாம்.

### யார் இந்த அகதி மக்கள்

எமது மண்ணைப்பொறுத்த வரையில் வன்னியாய் இருந்தாலும்சரி மட்டக்களப்பாக இருந்தாலும்சரி மலையகமாக இருந்தாலும்சரிதிருமலையாக இருந்தாலும்சரி அனைத்துப் பகுதிகளிலும் வாழுவோர் பரந்துபட்ட தமிழ் இனத்தின் ஒரு அங்கமே, பரந்து பட்ட தமிழ் இனத்தின் இரத்த உறவுகளே.

இதற்கொப்பநொந்த நிலையில் தமிழ் பூமியின் தலைநகராக விளங்கும் யாழ். நகர் நோக்கி அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள எமதுஇந்த உறவான இம்மக்களை வரவேற்று ஆதரவு வழங்வது யாழ். குடா நாட்டுத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையே.

### அகதி விடயத்தில் ஸ்ரீலங்காவின் நிலைமை

கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களுக்கு ஸ்ரீலங்கா அரசினால் வழங்கப்பட்ட மானியம் கிடைத்தது. இந்த மானியத்தின் மூலம் அகதிகள் முகாம்களில் வருடக் கணக்கில் தங்குவதற்கும்அவர்களை பராமரிப்பதற்கும் ஏதுவாக இருந்தது.

இன்றைய காலகட்டத்தில் நாம் அப்படி ஒன்றினை எதிர் பார்க்க முடியாது ஏனெனில் இன அழிப்புக்கான சர்வதேச அங்கீகாரம் ஒன்று மாத்திரம் கிடைக்கும் பட்சத்தில் அத்தனை தமிழர்களையும் தாக்குதல் நடத்தியோ அல்லது பட்டினி போட்டோ சாகடிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு தயாராக உள்ளது என்பது மாத்திரம் உண்மை இதனை தமிழ் மக்கள் மீது போர்ப்பிரகடனம் செய்யப்பட்டு இரண்டு வாரங்கள் ஆகி விட்டபோதும் இதுவரை வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு எவ்வித உணவுப் பொருட்களோ, மருந்துப் பொருட்களோ, அனுப்பி வைக்காது பொருளாதார தடை விதித்திருப்பதன் மூலம் நாம் உணர முடிகின்றது.

அவ்வாறெனில் சகல பகுதிகளிலுமாக பல்லாயிரக் கணக்கில் அகதிகளாக்கப்பட்டுள்ள இம் மொத்த மக்களையும் எப்படி நாம் வரவேற்பது அல்லது பராமரிப்பது என்ற கேள்வி எழுதுவது தவிர்க்க முடியாததே.

### இன்றைய அவசியத்தேவை

இந்நிலையில் தமிழர் பிரதேசங்களில் இயங்கும் பொது ஸ்தாபனங்கள் ஏற்கனவே திட்டமிட்ட பல வேலைப் பழுக்களைக் கொண்டிருப்பினும் கூட இன்றைய காலக் கட்டத்தில் மிக, மிக பிரதானமானதும் அவசியமானதுமான அகதிகள் சம்பந்தப் பட்ட பிரச்சினையை ஒழுங்கு படுத்துவதிலும், பராமரிப்பதிலும் முன்னுரிமை கொடுத்து செயல்பட வேண்டும்.

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்'' என்ற பாரதியார் கூற்றுக்கு ஒப்ப யாழ். நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் இந்த அகதிகளுக்கு உதவ முன்வர வேண்டும்.

### ஆலயங்களின் பங்கு

இதேவேளை எம்பூமியில் பல ஆலயங்களுண்டு வரலாற்று சிறப்பு மிககது இவைகலெல்லாம் இந்த ஆலயங்களில் பல லட்சம் அல்லது கோடி பெறுமதியான சொத்துக்கள், பணங்கள் உள்ளன. இவ்வாறான இந்த ஆலயங்கள் இந்த அகதிகளின் துயர் துடைக்கத் தனது கண்களை சற்றும் திறக்காதா என்ற ஒரு கேள்வியை இங்கு எழுப்புவது தவறில்லை என்று நினைக்கிறேன். இதனைத் தவிர சமய ஸ்தாபனங்கள் பல உள்ளன. இவைகளும் கூட இந்த அகதிகள் பணியில் ஈடுபட முன்வரவேண்டும்.

### ஒரே இடத்தில் அகதி முகாம் அமைவது பொருத்தமல்ல

யுத்தம் என்னும் பொழுது அந்த யுத்தத்திலும் தர்மம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. இது சர்வதேச சட்டமும் கூட. இருந்தும் பேரினவாத சிறிலங்கா அரசு அந்த யுத்த தர்மத்தையும் மீறிய நிலையில் ஆலயங்கள், வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள் குடிமனைகள் உட்பட சகல பொது இடங்களிலும் நேபாம் உட்பட பயங்கர குண்டுகள் மூலமாகவும், ஷெல்கள் மூலமாகவும், வேட்டுக்கள் மூலமாகவும் இன அழிப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கு கடந்த புதன் யாழ். நல்லூர் கந்தசாமி கோவிலில் அகதிகளாக தங்கியிருந்த மக்களின்மீது சிறிலங்கா அரசு நடத்தியுள்ள ஹெலி தாக்குதல் தகுந்த சான்றாகும். இவ்வாறான சூழலில் முழு அகதிகளையும் குறிப்பிட்ட ஒரே இடத்தில் வைத்து பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது பாதுகாப்புக்கு உகந்ததல்ல என்பது குறித்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### சனசமூக நிலையங்களின் பங்களிப்பு

பல கிராமங்களின் தொகுப்பே யாழ்நாடு. ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு சனசமூக நிலையத்தை கொண்டுள்ளது. இந்த நிலையங்கள் யாவும் சமாஜங்களாக தொடர்பு படுத்தி மையப்படுத்தப் பட்டுள்ளன.

அகதிகளை இந்த சனசமூக நிலையங்களுக்கூடாக பராமரிப்பதற்கான ஒரு ஒழுங்கு முறை மேற்கொள்ளப்படுமாகில் அது பாதுகாப்பை பொறுத்த வரை உகந்த ஒன்றாக அமையும். இது விடயத்தில் பொது ஸ்தாபனங்கள், நல்லிதயம் கொண்ட மனிதர்கள், வாசிகசாலைகள், சமாஜங்கள் அனைத்தும் சிந்தித்து ஒரு செயல் வடிவத்திற்கு வருமா?

### அகதி முகாம் சகலரோக நிவாரணி அல்ல

முன்னைய காலத்தில் அகதி முகாம் என்பது அகதிகளுக்கான சகலரோக நிவாரணி என்ற ஒரு மனப்போக்கு அகதி மக்களின் மத்தியிலே நிலவியது. அதாவது தமக்கான அனைத்து வசதிகளையும் அகதிமுகாம்களே செய்து தர வேண்டும் என்ற நிலையே அதுவாகும்.

அகதி முகாம் என்பது நிச்சயமாக ஒரு சகல ரோக நிவாரணி அல்ல. மாறாக பாதிக்கப்பட்ட மக்கள் தமது மன நிலையில் மாற்றமடைந்து அடுத்துள்ள வாழ்க்கை என்னும் கரையை அடைவதற்கான ஒரு ஓடமே ஆகும். இதனை அகதி மக்கள் மாத்திரமல்ல அகதிகளை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் உணரவேண்டும்.

### சுய தொழிலே மாமூல் வாழ்க்கைக்கு உதவும்

அகதிகளாக வந்த மக்கள் வெவ்வேறு தொழில்களில் பழக்கப்பட்டவர்களாக இருக்கலாம். இருப்பினும் கூட அவர்கள் தற்பொழுது தாங்கள் தங்கியுள்ள பிரதேச தொழில் உறவுகளைப் பழகி சுயமான வாழ்க்கை ஒன்றை நடத்த முன்வரவேண்டும். இதுவே சரிந்துபோன அவர்கள் தம் வாழ்விலிருந்து அவர்களுக்கான ஒரு மாமூல் நிலையை உருவாக்கிக் கொள்ள உதவும். இது விடயத்தில் இம் மக்களை பராமரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொது அமைப்புக்கள் சரியானதோர் வேலைத் திட்டத்தை மேற்கொண்டு செயல்பட முன்வர வேண்டும்.

-மாத்தளையான்-

# பொது நிறுவனங்கள் உதவியில்லை; ஆனால் போர்க்கால அடிப்படையில் வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் வைத்திய

### எரிபொருள் தட்டுப்பாடு

வைத்தியசாலையின் முக்கிய

களை நீக்க வேண்டும் என்றார். இரத்ததானம் செய்ய

அத்துடன் பொதுமக்கள் வைத்தியசாலை முற்றத்தில் செய்தி அறிவதற்கு குழுமி

நேர சேவையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும் இதை அரசின் பலவீனமாகக் கருதக் கூடாதென்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருக்கிறார்.

பலவீனமாகக் கருதக்கூடாது என்று சொல்வதில் இருந்தே அரசின் பலவீனம் தெரிகிறது.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளை அழைத்து போர் நிலைமை பற்றி எடுத்துக் கூறியும் இன்னமும் சிறிலங்கா அரசு எதிர்பார்க்கும் எந்த உதவியும் கிட்டவில்லை!

வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கம் பிரசாரம் செய்வது போல் அரசபடைகள் முன்னேற முடியவில்லை.

யாழ்ப்பாணம் கோட்டையை முற்றுகையிட்டுள்ள விடுதலைப்புலிப் போராளிகளை விமானப்படையினர் என்ன தான் மோசமாக அடிக்கடி குண்டுகள் வீசித் தாக்கிய போதிலும் முறியடிக்க முடியவில்லை.

போர் தொடங்கி பத்தொன்பது தினங்களான பின்னரும் உணவுப் பொருள்களையும் மருந்து வகைகளையும் எரி பொருள்களையும் அரசு அனுப்பி வைப்பதாக அடிக்கடிவானொலியிலும்தொலைபேசியிலும் சொல்லி வந்தாலும் இன்னமும் எந்தப் பொருளும் இப்பகுதிகளுக்கு வந்து சேரவில்லை.

என்றாலும் தமிழ் மக்கள் சோர்ந்து விடவில்லை; போராளிகள் ஓய்ந்து விடவில்லை!

அரசின் பொய்ப் பிரசாரம் தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதற்கு உதவுமே தவிர வெளி உலகை ஏமாற்றுவதற்குப் பயன் பட மாட்டாது.

தமிழ் மக்கள் நீண்டகாலப் போருக்குத் தம்மைத் தயார் படுத்திக் கொண்டால்தான் நமது மக்களையும் நமது மண்ணையும் நமது போராளிகள் பாதுகாத்து விடுதலை பெற்றுத்தர வழி பிறக்கும்.

# ஜூலை மாத உணவுப் பண்டம் இப்போதே விநியோகம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் கஷ்ட நிலையைஉணர்ந்து வவுனியா அரச அதிபரும், கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவரும் எடுத்த முயற்சியினால் இம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு உணவு முத்திரைக்கான ஜூலை மாதம் வழங்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் இப்போதே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உணவுப் பொருட்கள் தீர்ந்துபோன காரணத்தினால் வவுனியா மாவட்டத்திலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது பூட்டிய நிலையில் காணப்படுகின்றன.

இராணுவநடவடிக்கையால் அகதிகளாக வீட்டைவிட்டு வெளியேறிய மக்களுக்கு இலவசமாக உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தினால் அகதிகளுக்கென இலவசமாக உணவுப் பொருட்கள் எவையும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வைத்திய சாலை தற்போதும்சுறுசுறுப்பாகப் போர்க்கால சேவையில் ஈடுபட்டுள்ளது. அதேவேளை எந்த ஒரு அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் உதவியும் அதற்குக் கிடைக்காது போயிருப்பது அங்கு காயங்களுடன் வந்துகுவிந்து கொண்டிருக்கும் நோயாளிகளுக்குக் கிடைத்துள்ள துரதிர்ஷ்டமே ஆகும்.

> யாழ். போதனா வைத்திய சாலை மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையுடன் இணைந்து இன்றைய போர்ச் சூழ் நிலையில் வட பகுதிமககளுக்கு அளப்பரிய சேவையாற்றி வருகிறது. இரு வைத்திய நிறுவனங்களினதும் சேவைபோற்றத் தக்கது
>
> இருந்தும் மருந்து வகைகள், எரிபொருள் ஆகியவற்றிற்கான தட்டுப்பாடுகள் அங்கு நிலவுகின்றன. மனித நேய ஸ்தாபனங்கள் கூட கைகொடுத்து உதவவில்லையாம்.

இந்த நிலைமை பற்றி அங்கு தற்காலிகமாகஇயங்கும் யாழ் வைத்தியசாலை உயரதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:

## உதவிகள் இல்லை

எமக்கு அரச சார்பாற்ற நிறுவனங்களோ, தொண்டர் ஸ்தாபனங்களோ எவையும் இன்றுவரை எதுவித உதவியும் செய்யவில்லை. யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகள்கூட எமக்குத்திருப்தி தருவதாக இல்லை. ஒருசில மருந்து வகைகளை விரைவில் வழங்குவதாக அவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் அவர்கள் ஏதோ ஒரு சில சரீர உதவிகளையும் செய்துவருவதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இருந்தும் ஒரு மருத்துவம் சம்பந்தமாக யுத்த காலத்தில் மனித நேய ஸ்தாபனங்கள் செய்ய வேண்டிய முழு உதவி இன்று வரை எமக்குக் கிடைக்கவில்லை.

## எரிபொருள் தட்டுப்பாடு

வைத்தியசாலையின் முக்கிய வசதிகள் யாவும் வாகனப் போக்குவரத்துச் சேவையிலேயே தங்கியுள்ளது. ஆனால் எரிபொருள் தட்டுப்பாடு எமக்குப் பெரும் கஷ்டத்தைத் தருகின்றது. இது மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

மேலும் இந்த எரிபொருள் தட்டுப்பாடுபற்றி வைத்திய சாலை ஊழியர் ஒருவர் பின்வருமாறு கூறினார்.

அன்றாடம் தேவையான சில அத்தியாவசிய சேவைகளான தொற்று நீக்குதல் போன்றவை இன்னும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே செய்யப்பட்டு வருவதால் அன்றாடம் நாம் யாழ் வைத்தியசாலைக்கு சென்று வரவேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் தொற்று நீக்கும் இயந்திரம் அவ் வைத்தியசாலையில் நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ளது. இதற்கு எமது அம்புலன்ஸ்கள் சேவையில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகும்.

## மருந்துத் தட்டுப்பாடு

மருந்துவகைகளின் இருப்பு நிலைபற்றி மருந்துக்களஞ்சிய பொறுப்பதிகாரி கூறும் பொழுது, தற்போது எமது சேவைக்கு ஏற்றதாக ஒரு வாரத்திற்கு மட்டுமே மருந்து வகைகள் உள்ளன. அவசர மருந்து வகைகளுக்கு எமக்கு அமைதியான நேரங்களிலேயே தட்டுப்பாடு இருந்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும் என்றார். அத்துடன் எமது வைத்திய சேவைகளுக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கம் சில மருந்துவகைகளை தருவதாக கூறியுள்ளது. இதுவும் ஒரு சில நாட்களுக்கே போதுமானதாக இருக்கும் எனத் தாம் நம்புவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

நிர்வாக அதிகாரி தற்போதைய சில பற்றாக்குறைகள் பற்றி பின்வருமாறு கூறினார்.

எமக்கு பிராணவாயு சிலிண்டர்கள் தட்டுப்பாடும், இரத்தம் தட்டுப்பாடும் தற்போது இருப்பதாகவும் கூறினார்.

அத்துடன் அவர் இரத்த தட்டுப்பாட்டை எமது மக்களே நீக்க வேண்டும் என்றார். இரத்ததானம் செய்ய முன்வந்து, அனைத்து மக்களும் வீணான உயிரிழப்புகளைத் தவிர்த்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## பார்வையாளருக்கு கட்டுப்பாடு

வெளிநோயாளர்களை அனுமதிப்பது பற்றி இன்று தொடக்கம்நாம் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம் காலை ஆறுமணி முதல் ஒரு மணிததியாலமும் மதியம் 12 மணிக்கும் மாலை நான்கு முப்பது மணியிலும் வெளியிலிருந்து வந்து நோயாளரை பார்வையிடலாம்

அத்துடன் பொதுமக்கள் வைத்தியசாலை முற்றத்தில் செய்தி அறிவதற்கு குழுமி நின்று நோயாளரை இடைஞ்சல் செய்வது எமக்கு பெரும் தொல்லையாக இருக்கின்றது என்றும் நிர்வாக அதிகாரி குறிப்பிட்டார். பார்வையாளர் கூடிநின்று கதைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## அனைத்துவைத்தியர்களும் சேவையில்

தற்போது போர்க்கால சூழ் நிலையை முன்னிட்டு போதனா வைத்தியசாலையின் அனைத்து ஊழியர்களும் வைத்தியர்களும் முழுநேர சேவையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

மேலும்சமுகம்தராதிருக்கும் ஊழியர்கள் யாழ் போதனா வைத்திய சாலைக்கோ அல்லது மானிப்பாய் அரசினர் வைத்திய சாலைக்கோ வந்து சேவையில் இணைய வேண்டும் என நிர்வாக அதிகாரி வேண்டிக் கொண்டார்.

இறுதியாக,யாழ் போதனா வைத்தியசாலையை திறப்பது பற்றி தாம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் கதைத்து நிலைமை பற்றி கொழும்புக்கு விளக்குமாறு கேட்டுள்ளதாகவும் நிர்வாக அதிகாரி கூறினார் (லோ)

# லித்வேனியா சுதந்திரப் பிரகடனம் நூறு நாள் நிறுத்தம்

(மொஸ்கோ)

லித்வேனியச் சுதந்திரப் பிரகடனத்தை நிறுத்திவைக்கப் போவதாக லித்வேனியாத் தலைவர் கூறியுள்ளார்.

மொஸ்கோவுடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே லித்வேனியத் தலைவர் இதனை அறிவித்துள்ளார். இச் சுதந்திரப் பிரகடன நிறுத்தம் நூறு நாட்களுக்கு நீடிக்கும் எனவும், இந் நிறுத்தம் அடுத்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் நாளில் இருந்தே நிறுத்திவைக்கப்படும் எனவும் லித்வேனியா அரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

லித்வேனியா சுதந்திரப் பிரகடனத்தை நிறுத்தினால் சோவியத் யூனியன் பொருளாதாரத் தடையை நீக்கும் என முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது சோவியத் அதிபர் கொர்பசேவ் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கெனத் கவுண்டாவிற்கு எதிராக

# லுசாக்காவில் இராணுவச் சதி அரச சார்பு படைகள் முறியடிப்பு

(லுசாக்கா)

சாம்பியாவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவச் சதிப் புரட்சி அரசபடைகளால் முறியடிக்கப்பட்டது. இச் சதிப் புரட்சி நடைபெற்றபோது அரச தலைவர் கெனத் கவுண்டா தலைநகரில் இருக்கவில்லை என்பதும் குறிடபிடத்தக்கது.

நேற்றுக் காலை ஒரு இராணுவ அதிகாரியும், அவரது சகபாடியான சிறு குழுவொன்றும் லுசாக்கா வானொலி நிலையத்தைக் கைப்பற்றி அரசாங்கத்தைக் கைப்பற்றியதாக அறிவித்ததைத் தொடர்ந்து, அரசாங்க இராணுவம் உடனடியாக அவர்களைக் கைதுசெய்து சதிநடவடிக்கையை முறியடித்துள்ளது.

இதேவேளை உணவுப் பண்டங்களின் விலைவாசிகள் உயர்வை எதிர்த்தும், பல கட்சி ஆட்சியமைப்பு முறையை வேண்டியும் கடந்த நான்கு நாட்களில் நடந்த கிளர்ச்சிகளில் 25பேர் உயிர் இழந்துள்ளார்கள்.

சாம்பியாவில் ஒருகட்சி ஆட்சி அமைப்பு வேண்டுமா அல்லது பலகட்சி ஆட்சி அமைப்பை நிறுவுவதா என்பதுபற்றி மக்களின் விருப்பத்தை அறிய ஒக்டோபரில் ஒப்பங்கேட்டல் ஒன்றை வைக்கப்போவதாக நேற்று முன்தினம் கெனத் கவுண்டா அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

# திருமலை அகதிகளுக்கு வழியில்

# சோதனை மேல் சோதனை!

## புடவைக்கட்டில் நகைகளை அறாவிலையில் விற்கும் அவலம்

(யாழ்ப்பாணம்)

திருமலையிலிருந்து முல்லைத்தீவுக்கு அகதிகளாக தப்பிவரும்மக்கள் திருமலையின்கரையோரக்கிராமமான புடவைக்கட்டில் சொல்லொணாத்துன்பங்களை அனுபவிப்பதாக அங்கு சென்று திரும்பிய வன்னி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தார்கள். புடவைக்கட்டிலிருந்து முல்லைத்தீவுக்கு வள்ளத்தில் வர பணம் கொடுக்க முடியாதவர்கள் கையில், கழுத்தில் இருக்கும் நகை நட்டுக்களை பவுண் ஆயிரம் ரூபா வீதம் அவ்வூர் வாசிகளுக்கு விற்று விடுகிறார்களாம்.

சைக்கிளை கொண்டுவருவோருக்கு அது எவ்வளவு நல்ல சைக்கிளாக இருந்தாலும் 500 ரூபாவுக்கு மேல் கொடுப்பதில்லையாம். கையில் எதுவுமின்றி வருவோர் புடவைக்கட்டிலேயே தங்கி நின்று உண்ண உணவு இன்றி மாற்று உடையின்றி கஷ்டப்படுகிறார்கள் என்றும் தெரியவருகிறது.

புடவைக்கட்டிலிருந்து முல்லைத்தீவுக்கு வரும் வள்ளங்களை நோக்கி புல்மோட்டை, கொக்கிளாய் இராணுவ முகாம்களிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் காயமடைந்துள்ளார்கள்.

இதனையடுத்து திரியாயிலிருந்து கொக்குத் தொடுவாய்க்கு ஊடாக காட்டுப் பாதை வழியாக முல்லைத்தீவுக்கு வரவேண்டுமானால் பாதைகாட்டும் வழிகாட்டிக்கு ஒவ்வொருவரும் 30 ரூபா வீதம் கொடுக்கவேண்டுமாம். இந்தப் பயணத்தில் மாலை 6.00 மணியிலிருந்து மறுநாள் காலை 8.00 மணிவரை நடந்தாலே முல்லைத்தீவை அடைய முடியும். குழந்தைகள் இருந்தால் அவை அழும் ஓசை கேட்டு அருகில் வெலிஓயா முகாம் இராணுவத்தினர் வந்துவிடுவார்கள் என்று கூறி குழந்தைகள் உள்ளோரை இப்பாதையால் கூட்டிவர வழிகாட்டிகள் மறுத்து விடுவார்களாம் (75)

## திருமலை அகதிகளின் பரிதாபநிலை:

# கணவனையும் மகனையும் கண்ணெதிரே இழந்த பெண்

(வல்வெட்டித் துறை)

திருமலை இராணுவத் தாக்குதல்களால் தமது கண்முன்னாலே கணவன் பிள்ளைகளைப் பறிகொடுத்ததோடு தமது உடல் உறுப்புக்களை இழந்த நிலையில் பெண் ஒருவர் வடமராட்சி வந்து சேர்ந்துள்ளார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி காலை 11. 30 மணியளவில் நிலாவெளி ஆறாம் கட்டையடியில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் பொன்னையா தர்மலிங்கம் (வயது 39) அவரின் மகன் துஷந்தரன் (வயது 07) என்பவர்கள் இறந்ததுடன் அவரின்மனைவி தர்மலிங்கம் விஜயலட்சுமி (வயது 32) பலத்த காயத்திற்கு உள்ளானதுடன் இடது காலும் துண்டிக்கப்பட்டார். இவரது ஏனைய இருபிள்ளையோர் தாக்குதலுக் குள்ளானதால் தற்பொழுது வடமராட்சியில் காயங்களுக்குச் சிகிச்சையைப்பெற்றுவருகிறார்கள் மேலும் நடராசா மோகனரூபன் (வயது 10) இறந்துள்ளார்.

ஏனைய ஷெல்தாக்குதலால் காயமடைந்தோர் விபரம்:- வேலுப்பிள்ளை சுகிர்தா (வயது 20) சுமன்ராஜ் சுமதி (வயது 13) ஆறுமுகம் கௌரிதேவி (வயது 14) இவரின் சகோதரன் ஆ. கௌரிதரன் (வயது 10) இறந்துள்ளார். திருமதி. சுப்பிரமணியம் செந்தில் மணி (வயது 32). அவரது மகள் சு. பூலோகதர்சினி (வயது 7) திருமதி தம்பையா செல்வம் (வயது 65) திருமதி சக்திவேல் பாப்பி வயது 45) செல்வி சத்திவேல் இந்துமதி (வயது 18) ஆகியோர் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். மேலும் வி. பாலசுந்தரம் (வயது 29) எஸ். சந்திரமதி(வயது19)ஆகியோர் இறந்துள்ளார்கள்.

மேற்படி காயமடைந்தவர்கள் அனைவரும் உடமைகள் இழந்த நிலையில் பெரும் காயங்களுடன் மாட்டுவண்டில் உழுவை மெசின் படகு போன்றவையின் உதவியுடனும் வடமராட்சி வந்து சேர்ந்து பிரதான கவனிப்புடன் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். (68)

## 4,000 முஸ்லிம் குடும்பங்கள் வேலணைக்கு இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 4,000 முஸ்லிம் மக்கள் தங்கள் வீடு வாசல்களிலிருந்து வெளியேறி தீவுப்பகுதியிலுள்ள சாட்டி, வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசலில் தஞ்சம் புகுந்துள்ளனர். வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. நா. பாலசிங்கம் இவர்களுக்கு உலர்உணவுப்பொருட்களை வழங்கி வருகி றார்.

இவர்களைத்தவிர சாட்டியிலுள்ள மாதாகோயிலில் சுமார் 5,000 பேர் மயிலிட்டியிலிருந்தும் குருநகர், பாஷையூர் பகுதிகளிலிருந்தும் அகதிகளாக வந்து தங்கியுள்ளனர். கரையோரப் பகுதிகளில் கடற்படையினர் ஏவும் பீரங்கிக்கணைகளால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்தே இவர்கள் வந்துள்ளார்கள்.

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் நிரந்தரமாக குடியேறியிருந்த தீவுப்பகுதி மக்களில் அநேகமானோர் தற்போது வானத்தாக்குதல், ஷெல் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக மீண்டும் தீவுப் பகுதிக்கு வந்துள்ளதால் அங்கு இடம் பெயர்ந்தோருக்கான நலன்களை கவனிப்பது பெரும் சிரமமாக இருப்பதாகவும் வேலணை உதவி அரசாங்க அதிபர் கூறினார்.

### ஊழியர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி மாவட்ட பிரிவு உருத்திரபுரத்தில் ஒரு அகதி

### ஹெலித்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வந்த ஹெலிக்கொப்

### சென்னை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவலில் இருந்தவர்கள் கற்களை வீசியதால் நான்கு சிறைக் காவலர்கள் காயமடைந்தனர். இக்கலாட்டாவைத் தொடர்ந்து சென்னை மத்திய சிறைச்சாலையில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

இச் சிறைச்சாலையில் ஈ. பி. ஆர். எல். எப், ஈ. என். டி. எல். எப், ரெலோ, புளொட், ஈரோஸ் இயக்கத்தினர் இருந்தனர். இச்சிறைச்சாலைக் கலாட்டாவின்போது ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏனைய இயக்கத்தினரால் பலமாக தாக்கப்பட்டதாகவும் தெரியப்படுகின்றது.

### புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்தையே ஜனாதிபதி பிரேமதாஸாவும் இழைத்தவர் ஆவார் என்பதையும் வலியுறுத்தி ஈழவர் ஜனநாயக முன்னணி செயலாளர் பாலகுமார் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவிற்கு கடந்த 26. 06. 90 எழுதிய கடிதத்தில்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் தொடர்பாக விடுத்த அறிக்கையில், கிழக்கில் தமிழ்ப் பேசும் மக்கள் இராணுவத்தால் தொடர்ந்தும் பழிவாங்கப்பட்டமையாலும், கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களாலும், கொழும்பில் எமது தோழர்கள் கைது செய்யப்பட்டமையாலும் ஜனாதிபதியைச் சந்திக்கும் எண்ணத்தை ஈழவர் ஜனநாயக முன்னணிச் செயலாளர் கைவிட்டதாகவும் தெரிவிக் ப்பட்டுள்ளது

### ஸ்ரீலங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்கை மாற்றுவதே திலகரட்னாவின் இந்த டில்லிப் பயணமென்று இலங்கை அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டது. இவர் முன்பு டில்லியில் இலங்கைத் தூதராகப்பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டனர். இரத்தம் சொட்டச் சொட்ட மயங்கிய நிலையில் இராணுவவாகனங்களில் ஏற்றப்பட்டு இவர்கள் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் எங்கே கொண்டு செல்லப்பட்டார்கள் என்பது பற்றிய விபரங்கள் தெரியவில்லை. (மு)

### பிரேமா

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாடல்களையும் நட்பு அடிப்படையில் மேற்கொள்வதே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கானபுதிய உத்தியாகும் என்று அவர் கூறியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

### சிறையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 136 பேரும் திருச்சி கொட்டப்பட்டு அகதிமுகாமில் சேர்க்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இம்முகாமில் மொத்தமாக 1044 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

### இந்தியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசினால் கூட்டப்படவுள்ள இந்த தேசிய பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள யாழ். கோட்டை முகாமின் முற்றுகையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துதல் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. யாழ். கோட்டை முகாமில் தற்பொழுது 240 படையினர் இருப்பதாகவும் சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

### வைத்திய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மாவட்ட வைத்திய அதிகாரி ஸ்ரீராஜ்வரன் உதவியாளர்களான குகதேவி, தியாகராசா ஆகியோர் நெடுங்கேணி ஆஸ்பத்திரிக்கு எதிர்வரும் செவ்வாய் முதல் செயலாற்றும்படி மாற்றப்பட்டுள்ளார்கள். இதேபோல் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி இளங்கோ, டாக்டர் செந்தில்நாதன் ஆகியோர் புளியங்குள ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகியுள்ளார்கள். உதவியாளரான சண்முகநாதனும் (ஆர். எம். ஏ.) புளியங்குளத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

செந்தில்நாதன் (ஆர். எம். ஒ) புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகியுள்ளார்.

எதிர்வரும் செவ்வாயன்று மேற்படி இடமாற்ற உத்தரவை பிரதேச சுகாதார வைத்திய அத்தியட்சகர் கே. மாணிக்கம்பிறப்பித்துள்ளார். இடமாற்றங்களைப் பொறுப்பேற்பதில பயணக் கஷ்டங்கள் இருந்ததால் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடும்படி பணிக்கப்பட்டுள்ளது.

### செம்மலைக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாலும், படகுகள் மூலமாகவுமே தமது பயணத்தை மேற்கொண்டிருந்தனர். காயப்பட்டு வந்தவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் சிகிச்சை அளித்தனர்.

### கொழும்புபிலிருந்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டனர். பலர் பொருள்களையும் பறிகொடுத்தனர். காயமடைந்தவர்களில் பெண்களும் அடங்குவர்.

கொழும்பில் அநாதரவான நிலையிலுள்ள தமிழர்களை கப்பலிலும், பஸ்களிலும் சொந்த இடங்களுக்குஅனுப்பி வைக்க ஏற்பாடு செய்வதாக அரசு அறிவித்த போதிலும் இதுவரை எவரும் அனுப்பி வைக்கப்படவில்லை.

### யாழ். மாவட்டத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலிருந்து 5000 க்கும் அதிகமான குடும்பங்கள் இங்கு வந்துள்ளார்கள் என்றும் யாழ். அரச அதிபர் திரு. அல்பிரட் கூறினார். (75)

தமிழீழ விடுதலைப்புலிகளால் தமிழீழத்தைக்காக்க அணிதிரண்டு போராட வருமாறு
தமிழீழ மக்களுக்கு விடுக்கப்பட்ட பிரசுரம்

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

காலும் துண்டிக்கப்பட்டார். இவரது ஏனைய இருபிள்ளைகளான த. தவமலர் (வயது 12) த. புஸ்பமலர் (வயது 09) என்பவர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

மற்றும் தங்கமுத்து மயில்வாகனம் (வயது 46) கதிரேசன் லதா (வயது17) சிற்றம்பலம் சிவநாதன் (வயது 39) அவரது மகன் சி. கோணேஸ்வரதேவன் (வயது 16) இறந்துள்ளார்கள். இவர்களது தாயார் சிவநாதன் யோகேஸ்வரி (வயது 33) சகோதரர்கள் சி. விஜயகுமார் (வயது12) சி. சசிகுமார் (வயது 10) ஆகி

## பெருமாளுக்கு

*(1ஆம் பக்கத் தொடர்ச்சு)*

சியும் தோல்வி கண்டது.

தற்பொழுது லக்சதீவில் தங்கியுள்ள வரதராஜப் பெருமாளுக்குஇந்தியாஉத்தியோகபூர்வமாக பாதுகாப்பு வழங்குவது இன்றைய இந்திய அரசாங்கத்தின் கொள்கைக்கு முரண்பாடான செயல் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் இந்திய அரசாங்கம் தர்மசங்கடமான நிலைக்கு உள்ளாகியுள்ளது.

அதே வேளை ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் லக்சதீவிற்கு வரதராஜப் பெருமாளைச் சந்திக்க வருவதால் அவரைப் பாதுகாப்பதில் தங்களுக்குச் சிரமம் ஏற்பட்டுள்ளதாக மத்திய ரிசேவ் பொலிஸ் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து கறுப்புப் பூனைகளை பாதுகாப்பிற்கு நியமிப்பதற்கு மத்திய அரசு யோசனை செய்து வருகின்றது.

## பாலைதீவு

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நங்கூரம் இடப்பட்டு நிற்பதால் குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, துண்டிப் பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர். (21)

நொச்சி மாவட்ட பிரிவு உருத்திரபுரத்தில் ஒரு அகதிமுகாமை நடாத்தி வருவதனால் பெரும் தொகையான அகதிகள் இங்கேயே தஞ்சமடைந்துள்ளனர். இவர்களும் இந்தவைத்தியசாலையிலேயே சிகிச்சை பெறுகின்றனர்.

தினமும் 400 க்கும் அதிகமான நோயாளர்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. டாக்டர்கள் சண்முகராசா, சந்திரசேகரம் ஆகிய இருவர் மட்டுமே இங்கிருந்து சிகிச்சைஅளித்துவருகின்றனர்

கிளிநொச்சி வைத்யதிசாலையில் கடமை புரிந்த தாதிமார்களில் சிலராவது இங்கு வந்து நோயாளருக்கு உதவ முன்வரவேண்டும். தங்களின் உயிர் தப்பினால் போதும் என்று தாதிமார் எண்ணி வெறுமனே வீட்டில் இருப்பதால், அவர்கள் தமது கடமையில் இருந்து தவறுவதோடு, பல உயிர்களின் இழப்புகளுக்கும் மறைமுகமாக உதவு பவர்களாகிறார்கள்

மேற்படி வைத்தியசாலை டாக்டர் சண்முகராசாவின் உருக்கமான வேண்டுகோளை அடுத்து கிளிநொச்சி மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர் திரு. கென்னடி தலைமையில் சென்று அவ் வைத்தியசாலையில் பல முதலுதவிச் சிகிச்சைகளை செய்து வருகின்றனர். ஏனைய வைத்தியசாலைகளுக்கும் சென்று இவர்கள் உதவ முன்வந்துள்ளனர். (49)

## கருணாநிதி

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

"திரு. கருணாநிதி தான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது இலங்கைத் தமிழரை காப்பாற்றும் வகையில் இந்தியா தமது படைகளை இலங்கைக்கு அனுப்பக் கோரி தனது சட்டப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். என்றும் திரு. வாழப்பாடி தெரிவித்துள்ளார்.

இருந்து வந்த ஹெலிக்கொப்டர் திக்கம், வதிரி, நவிண்டில், மூத்தவினாயகர்கோவில், கரணவாய், மண்டான் போன்ற பகுதிகளை நோக்கித் தாக்குதல் நடாத்தியது. உயிர்ச்சேதம் இல்லாதபோதும் பலரின் வீடுகளில் வீட்டுக்கூரைகள் சேதமானது. (68)

## விமானத் தாக்குதல்

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

விவசாயப் பூமியான கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழர்கள் பலரும் 1983ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வருகின்றனர்.

### கால்நடைகள் பலி

நேற்றைய விமானத் தாக்குதலில் கால்நடைகள் பலவும் மடிந்து போயின. வயலில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயிகள் பலரும் காயமடைந்தனர். முறிகண்டியிலும் குண்டுவீச்சினால் கடைகள் சேதமடைந்தன. சிலர் காயமடைந்தனர்.

### தர்மபுரத்தில்

தர்மபுரத்தில் வீடு, கராஜ் தேவாலயம் ஆகியன முற்றாகச் சேதமடைந்தன. கனகபுரத்திலும் திருநகரிலும் இரண்டு வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

### கொக்காவிலில்

கொக்காவில் காடுகள் மீது இரண்டு அவ்ரோ விமானங்கள் குண்டுகள் வீசியதால் காடுகள் தீப்பற்றிக்கொண்டன. இக்காடுகள் தற்பொழுதும் எரிந்த வண்ணமுள்ளன.

## சிறுப்பிட்டி

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வைக்கப்பட்டிருந்த 10 பவுண் தங்க நகைகளையும் 10 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சில தினங்களுக்கு முன் இதேபோல இன்னொரு வீட்டினுள் புகுந்து நித்திரையிலிருந்த பெண் ஒருவரின் தாலிக் கொடியை திருடர் அபகரித்துச் சென்றுள்ளனர். இதனால் அப்பகுதியில் கொள்ளையர் பயம் அதிகரித்துள்ளது. (75)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# Liberation Tigers of Tamil Eelam

Liberation Tigers Of TAMIL EELAM

திகதி: 01-07-1990

இனத்தைக் காக்கும் களத்தில் குதிக்க

# அனைவரும் அணிதிரளுங்கள் !

தமிழீழ மக்களே!

தமிழீழ விடுதலைக்காக எமது தலைவரால் நான்கைந்து பேருடன் தொடங்கப்பட்ட எமது இயக்கம் இன்று மாபெரும் விடுதலை இயக்கமாக, தமிழ்பேசும் மக்களின் தேசிய இராணுவமாக வளர்ச்சியடைந்துவிட்டது. இந்த வளர்ச்சிக்கு பல்வேறு இன்னல்கள், இடையூறுகளுக்கிடையே உள்ளத்து உறுதியுடன் இயக்க வீரர்களும், வீராங்கனைகளும் ஆற்றிவந்த மனமுவந்த அயராத உழைப்பும், உயிரைத் துச்சமென மதித்து களப்பலியாகிய 1500க்கும் மேற்பட்ட இயக்க வீரர்களின் உயிர்த்தியாகமுமே காரணமாகும். தமிழ்பேசும் மக்கள் வழங்கி வந்த ஆதரவும், ஒத்துழைப்பும் எமது வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்தன.

எந்தவொரு வெளிசக்திகளின் உதவியுமின்றி தமிழ்பேசும் மக்களின் பேராதரவுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ள எமது தேசிய இராணுவத்தின் மீது (விடுதலைப்புலிகள் மீது) இன்று சிறிலங்கா அரசு பகிரங்கமாகவே யுத்தப்பிரகடனம் செய்து முப்படைகளையும் ஏவி தாக்குதல்களை நடாத்தி வருகின்றது.

சிறிலங்கா அரசு தொடுத்திருக்கும் யுத்தம் விடுதலைப்புலிகள் மீதானதல்ல; தமிழ்பேசும் மக்கள் மீதான தாக்குதல் தான் என்பது வெளிப்படையானதே. சிறிலங்காப் படையினரின் இத்தாக்குதலில் பெருந்தொகையாகக் கொல்லப் பட்டிருப்பது விடுதலைப் புலிகளல்ல; தமிழ்பேசும் மக்களே! வீடுகள், கடைகள் மற்றும் சொத்துக்களையிழந்து அகதிகளாக்கப்பட்டிருப்பது தமிழ்பேசும் மக்களே!

பாலியல் வன்முறைக்குள்ளாகியிருப்பது தமிழ்பேசும் மக்களே!

பெருந்தொகையில் காயமடைந்து அவதியுற்றுக்கொண்டிருப்பது தமிழ்பேசும் மக்களே!

சிங்களப்படையினரால் மனிதகவசமாக்கப்பட்டு வருவது தமிழ்பேசும் மக்களே!

தமிழீழ விடுதலை ஒன்றுதான் தமிழ்பேசும் மக்களுக்கு உண்மையான, நிரந்தரமான பாதுகாப்பு என்பது இதனால் உறுதியாகிவிட்டது.

தமிழீழ விடுதலைக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தை நோக்கி நாம் தள்ளப்பட்டுவிட்டோம். தமிழ்பேசும் மக்கள் ஒவ்வொருவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிவிட்டது.

தமிழிளைஞர்களே! பெண்களே! தமிழீழத்தின் தேசிய இராணுவமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உடனடியாக உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.

இனத்தைக் காக்கும் களத்தில் குதிக்க அனைவரும் அணிதிரளுங்கள்!

மத்தியகுழு
தமிழீழ விடுதலைப்புலிகள்

வெளியீடு: செய்தி வெளியீட்டுப் பிரிவு விடுதலப்புலிகள் மக்கள் முன்னணி